

தலைமைக் கழகப் பேச்சாளரும், மாநில இலக்கிய அணி துணை செயலாளருமான மு. உத்திராபதியின் மைத்துனர் முரசொலி நிர்வாக மேலாளர் ஜி. இளங்கோ அவர்கள் உடல் நலக் குறைவு காரணமாக 17.12.2024 அன்று மறைவெய்தினார். நாகை மகாலெட்சுமி நகரில் வைக்கப்பட்ட ஜி.இளங்கோ அவர்களின் உடலுக்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக தலைவருமான என்.கௌதமன் அஞ்சலி செலுத்தினார். உடன் மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இல மேகநாதன், நாகை நகரக் கழக செயலாளரும், நாகை நகர்மன்ற தலைவருமான இரா.மாரிமுத்து, தலைமைக் கழக பேச்சாளர் ஆடுதுறை மு. உத்திராபதி, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஆர்.ஏ.டி. அண்ணாதுரை, ஆர்.ஆர். குலோத்துங்கன், மாவட்ட கலை இலக்கிய அணி தலைவர் இரா. தங்கதுரை, மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு தலைவர் மரியதாஸ், நாகை நகரக் கழக நிர்வாகிகள் பி. திலகர், வெற்றிலை கடை சிவா, நகர்மன்ற உறுப்பினர். சுரேஷ் குமார் மற்றும் பலர் உள்ளனர்.

### கழக பொதுச்செயலாளர், துரைமுருகன் கலந்து கொள்கிறார்!

# வேலூர் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்கள் கலந்துரையாடல் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

வேலூர், டிச. 19-

வேலூர் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



வேலூர் மாவட்ட தி.மு.க. மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி தலைமையில் இன்று ( 19.12.2024 - வியாழக்கிழமை) மாலை 04.00 மணியளவில் வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக பொதுச்செயலாளரும், நீர்வளம் கனிமவளம் மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியுள்ளார். எனவே வேலூர் மாவட்ட திமுகவிற்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் ஆகியோர்கள் அனைவரும் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பொருள்: 1. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

# பேராசிரியர் வழி அமிழ்தம் வழங்கும் முதல்வர் ஆட்சி!

நாடுகளை வழிந டத்தும்
நன்மாந்த நேயம் கொண்டே
கேடுகளை அறியா ராகி
கிழக்குதரும் விடியல் போல
பாடுபடும் தலைமைப் பண்பு
படைத்தவரே அரசி யல்தேர்
தேடுபுகழ்த் தலைவர் என்றால்
திகழ்தலைவர் அன்பழகர் தான்!

இஞ்சிற்றும் சோரம் போகாக்
கேண்மைகள் வளர்க்கும் சிந்தை
அஞ்சாத ஆண்மைப் பண்பும்!
அடலேற்று வலிமை ஏற்றுச்
துஞ்சாதே கழகம் காத்த
துடிப்புடைகை; கலைஞர்க் கேதான்
எஞ்சாதே தோள்கொ டுத்த
இருந்தமிழ்அன் பழகர் அன்றோ!

கூடுவிட்டுக் கூடு பாயும்
கொள்கைதேர் அரசி யல்தான்
கோடுபோல நிமிர்ந்து நின்று
கொள்கைமுழக் கங்கள் செய்வதே
நீடுபுகழ்க் கலைஞர் நெஞ்ச
நிலைஅறிந்து தமிழ்நாட் டிற்கே
பீடுநடைமப் பெருமை சேர்த்தார்
பேறுநம்அன்ப ழகர் தானே!

நம்பிக்கைக் கலைஞர் மூச்சாய்
நட்புக்கோர் இலக்க ணம்மாய்!
தும்பிக்கை வேழம் போன்று
துணைஅன்ப ழகர்தான்! பல்லோர்
எம்பிக்கை மறைத்த போதும்
இடர்நீக்கித் தி.மு.க.வின்
பம்பிக்கை பார்க்கும் தீயர்
பகைமைமுடி பேராசானே!

தந்தைநம் பெரியார் பாதை
தடம்மாறா தேதான் நின்று
எந்தைநம் அறிஞர் அண்ணா
இதயத்தில் குடிபு குந்தே
விந்தைநம் கலைஞர் ருக்கே
வினைத்திட்ப நெஞ்சம் தேற்றி
செந்தமிழ்நம் நாடு வாழ
தேர்ந்தாஃகி அன்பழகர்தான் ! ஆம்!
அன்பழகன் போல்த லைவர்
அரசியலில் ஒழுக்கம் காத்தார்



மன்பதைதாம் அரிது காணல் !
மதித்தாரே புலவர் கற்றார்!
அன்றிவன்(பு) அழகர் என்றும்
அண்ணைதமிழ் வாழும் மட்டும்
என்றென்றும் தமிழ்நாட் டில்தான்
இருக்கின்றார்! கலைஞ ரோடே!

எத்திக்குள் அரசி யல்தான்
இருக்கின்ற தலைவ ருள்ளும்
வித்தகராய் இருந்த போதும்
வியன்தலைமை கலைஞர் தேர்ந்தே
ஒத்ததையே அறிந்தே ஆற்றல்
ஒத்துழைப்பைத் தந்தே வென்ற
ஒத்துரிமை அன்பழகன் போன்றே
ஒருவரையாம் கண்ட துண்டோ!

தமிழ்நாடு நிமிர்ந்தே வெல்லும்
தகைமுதல்வர் இஸ்டாலின் ஈடில்
இமிழ்கடலின் ஓசை போல
எடுத்துக் காட்டான ஆட்சி!
அமிழ்தத்தை வழங்கு கின்றார்
அதற்கிடையூறு செய்வார்
தமின்சூழ்ச்சி முறிய டிப்போம்
பேராசான் பாதை வெல்வோம்!



பெருங்கவிக்கோ
**வா.மு.சேதுராமன்**
உலக அமைப்பாளர், பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்.

# பெரியாரின் அறிவியக்க மாணவர் பேராசிரியரின் பெரும்புகழ் ஓங்குக!

தந்தை பெரியாரின் அறிவியக்க மாணவர்! பேரறிஞர் அண்ணா அவர்களின் உலைகளத்தில் சுழன்றெழுந்த சுயமரியாதை பெரு நெருப்பு! தலைவர் கலைஞர் அவர்களின் உற்றதுணை! நட்பிற்கோர் பிசிராந்தையார்! கழகத்தின் பொதுச் செயலாளராக பன்னெடுங்காலம் பணியாற்றிய இனமானப் பேராசிரியப் பெருந்தகைக்கு இன்று 102 வது பிறந்தநாள்!

திங்களொடு செழும்பரிதி தன்னோடும், விண்ணோ டும், உடுக்களோடும், மங்குள் கடல் இவற்றோடும் பிறந்த தமிழுக்கு இன்று பிறந்தநாள்!

ஆம் டிசம்பர் 19 பொதிகைமலைத் தென்றல் பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கு பிறந்தநாள்! மார்கழித் திங்கள் மதி நிறை நன்னாளாம் 4 ம் தேதியன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் நம்பிக்கை! தலைவர் கலைஞர் அவர்களின் உயிரனைய உற்றதோழர்! பல கோடி தமிழர்களின் தன்மானம் காத்த இனமானக் காவலருக்கு இன்று பிறந்தநாள்!

இருபெரும் நூற்றாண்டுகளின் நெடிய காலகட்டத்தில் எழுந்த சமூக, அரசியல், கலாச்சாரம், பண்பாடு, மொழி மாற்றங்களில் என்னவெல்லாம் அதிசயங்களும், புரட்சிகளும் வெகுண்டெழுந்தனவோ, அதே காலகட்டத்தில் தான் நமது திராவிட இயக்க தீரர்கள் சர். பிட்டி. தியாகராயர், டி. எம். நாயர், நடேசனார், பெப்பிலியரசர், பட்டிவீரன்பட்டி சௌந்தரப்பாண்டியன் இவர்களைத் தொடர்ந்து, தந்தை பெரியார், மறைமலையடிகள், திரு.வி.க., கி.ஆ.பெ. விசுவநாதன், தொடங்கிய பண்பாட்டு, மொழி, இன மீட்பு பயணத்தில் இரண்டாவது, மூன்றாவது அணிகளில் அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், தோழர் ஜீவானந்தம் போன்றோரோடு சமகால களங்கள் கண்டு, தனித்தமிழ் இயக்கத்தில் தன்மானம் தாழ, தலை தாழமாட்டோம் என்று வெந்தே போயினும், நொந்தேமாயினும், தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்று நின்ற அறிவியக்க அடலேறாய், அறிவுப்பசியுடையோரெனும் படையிடை சுழன்று, களமாடி, வீணரை வீழ்த்தி, தமிழ்வாணரெல்லாம் வாழ்த்திய பெருமகன் பேராசிரியர் பெருந்தகை.

காட்டூர் ராமய்யா, பழைய வடகண்டம் நாராயணசாமி, கனியூர் குடும்பத்து சோமசுந்தரம் என சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற நாளில், பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆற்றோரம் ஏ, தாழ்ந்த தமிழகமே! எனும் ஆற்றொழுக்கு புரட்சி உரை வீச்சால், தெள்ளிய கருத்துக்களால், தமிழின்பால், அதோடு அண்ணாவின் கனிவாலும் ஈர்க்கப்பட்டு பாரம்பரிய காங்கிரஸ் குடும்பத்தைச் சேர்ந்த ராமய்யா நமக்கு பேராசிரிய பெருமகனாய் கிடைத்தார். பழைய வடகண்டம் நாராயணசாமி நெடுஞ்செழியனாக, சோமசுந்தரம் மதியழகன் என ஆனார்கள்.

இத்தகையோரின் தமிழ்ப்பணி, இனப்பற்று கல்லூரியோடும், வகுப்பறைகளோடும் வாசம் விட்டுப் போய்விடாமல், குக்கிராமத்திற்கும், குளக்கரைகளுக்கும் வந்து சேர, குட்டிச்சுவரின் நடுவிலும், கீரல் ஏற்படும் ரணங்களையும் தாங்கி, ஒரு குட்டிச் சிறுவனின் சுட்டி விரல்கள் பசை தடவிய சுவரொட்டிகளை ஒட்டிச் சென்றது. கைகளில் ஏற்பட்ட ரத்தக் காய்ப்புகளை பொருட்படுத்தாமல்!

**வீரு பாய்ச்சும் விரிவுரையாளர்கள் வருகை!**

நெடுஞ்செழியன் எம்.ஏ.க. அன்பழகன் பி.ஏ. (ஹானர்ஸ்)

அந்த சுவரொட்டிகளை ஒட்டிய பிஞ்சு விரல்களுக்கு சொந்தக்காரர் அன்றைய திருவாரூர் கருணாநிதி எனும் நம்மருந்தலைவர் கலைஞர் அவர்கள்.

கூட்டம் முடிந்து பேச்சாளர்களுக்கு வழிச்செலவிற்கு கூட கொடுத்தனுப்ப பணமில்லாமல், தன் வீட்டிலிருந்த வெள்ளிக் கிண்ணத்தை எவருக்கும் தெரியாமல் எடுத்து விற்று வழியனுப்பியதெல்லாம் ஒரு துணைக்கதை.

இப்படி அறிஞர் அண்ணா அவர்களின் தடம் பற்றி தங்களையும் வளர்த்துக் கொண்டு, தமிழையும் வளர்க்க தனித்தனி பாணியை பின்பற்றினர் அவரின் தம்பிகள்.

தந்தை பெரியார் ஒரு சமூக சீர்கேடான கருத்தினை தடாலென, நேராக நெற்றிப் பொட்டில் அடிப்பார். அண்ணா அவர்களோ, அதை களிம்புடன் கனிவாகத் தந்திடுவார். தலைவர் கலைஞர் அவர்கள் அந்தக் களிம்பை தேனிடைக் கலந்து இதமாக்கி, வலி இல்லாமலே உரைத்திடுவார். நாவலர் பேச்சில் நகைச்சுவை மிகுந்து, நாவண்மை வெளிப்படும்.

சி. பி. சிற்றரசுவோ, சிரிப்பாலே சிதறடித்து, சிந்தனையை தூண்டிடுவார். அப்போதே மேற்கத்திய புரட்சி, தொழில் நவீன வளர்ச்சி என தனித்தடத்தில் செல்லும் அறிவுலக மேதை முரசொலி மாறன் அவர்களின் பேச்சு.

மாநாட்டு இடைவேளையா? மக்கள் கண்களில் சோர்வு தெரிகிறதா? கூப்பிடு கோடம்பாக்கம் குமாரை. நன்னிலம் நடராசனை என்பாராம் பேரறிஞர் அண்ணா.

அப்படியொரு நகைச்சுவை வெடி அவர்களின் பேச்சில்.

மக்கள் கலையின்பால் வயப்பட்டுள்ளதை அறிந்து, திரைக்கதை மூலமும், வசனத்தின் மூலமும் மாபெரும் எழுச்சி உண்டாகும் போது, நூறு பொதுக்கூட்டங்கள் சொல்ல முடியாததை, ஒரு திரைப்படத்தின் மூலம் சொல்லலாம் என்பதை நிரூபித்து, பல வெற்றிப் படைப்புகளை தந்த தலைவர் கலைஞர் இயக்கத்திற்கு அரணாய், வேலாய், வாளாய், கேடயமாய் முரசொலியை கையில் கொண்டு முழங்கினார். சித்த மருத்துவம், பெண்ணியம் என சத்தியவாணி முத்துவும், வாலிபப் பெரியார் என ஏ. வி. பி. ஆசைத்தம்பியும் இப்படி பல தரப்பட்டோரின் இடையே, தனக்கான தனிப்பாதை தன்மானப்பாதை, தமிழ் முன்னேற்றப் பாதை இனமானத்தை பழிக்கும் இழிவுகளை ஒழிக்கும் உத்திகளை கையாண்டு, தமிழன் பூமியில் எவருக்கும் தாழ்ந்தவன் இல்லையென்பதில் மூப்பினை துணை கொண்ட முதிர்ந்த முடிவுகள்.

சீர்திருத்த திருமணங்களில் இவரைவிட தமிழ்வழி மணங்களை வலியுறுத்தியோர் இல்லை. வடமொழி பெயர்களை தமிழ்படுத்துவதில் முனைப்புடன் இருந்தார். பேராசிரியர். 1956 ல் கழகத்தின் தலைமை அலுவலகமான அன்பகத்தில் பணியாற்றி வந்த எனது தந்தையின் கழகப் பற்றையும், தமிழ் ஆர்வத்தையும் அறிந்த ஐயா அவர்கள் அப்பாவின் அப்போதைய பெயரான " ஜெயகரன் " என்பதை " வெற்றிவீரன்" என்று தமிழ் பெயராக்கினார்.



வீண் ஆடம்பரம், படாடோபம் பேராசிரியருக்கு அறவே பிடிக்காது.

1987 நான் சட்டக்கல்லூரி மாணவன். இன்றைய விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன் அவர்களும் தி.மு.க. மாணவரணியில் எங்களோடு பணியாற்றினார். அப்போது சென்னை புரசைவாக்கம் மில்லர்ஸ் சாலை பக்கத்தில் இருந்த மீனாட்சி திருமண மண்டபத்தில் பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்கள் பேச வந்தார். ஆர்வமிகுதியில் சில மாணவர்கள் வெடிகளை வைத்து வெடித்தனர். உடனே பேராசிரியர் சடுதியும் தாமதிக்காமல், தனது காலால் வெடிகளை அணைத்துப் போட்டு, "உங்களுக்கெல்லாம் தன்மானம் இல்லையா?" சற்றே கோபத்தில் அந்த மாணவர்களை கடிந்து கொண்டார்.

அது எம். ஜி. ஆர் ஆட்சி காலம். அப்போது அ.தி.மு.க . சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் பேராசிரியரின் நேர்மை அனலை நெருங்கும் விதத்தில் ஒரு வார்த்தை சொல்லிவிட்டார். அவ்வளவு தான் ஆறடி உயரம், ஆஜானுபாகு, வளையாத நெடிய பேராசிரியர், தனது துண்டை உதறி தோளில் போட்டபடி,

"எனது நேர்மையை சந்தேகிக்கும் யோக்கியன் எவனும் இந்த அவையில் இல்லை" எனச்சொல்லியபடி பேரவையை விட்டு வெளியேறினார். ( அப்போது தலைவர் கலைஞர் அவர்கள் சட்டமன்ற மேலவை உறுப்பினர் ). அவ்வளவு தான். பேரவைத்தலைவர், முதல்வர் எம். ஜி. ஆர், அமைச்சர்கள், எதிர்க்கட்சி றுப்பினர்கள் இடையே பெருத்த அமைதி. இதன் பலனாக நான்கைந்து நாட்கள் அந்த உறுப்பினரை அவையில் காணவில்லை.

தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு முறை "நான், இயக்கத்திற்காக பேசுகிறேன் பேராசிரியர் அவர்களோ, எனக்காக பேசுகிறார்" எனப் புகழாரம் சூட்டினார். தலைவர் கலைஞர் அவர்களின் குடும்பத்தின் அத்தனை திருமணங்களும் பேராசிரியர் தானே தலைமை தாங்கினார்!

கவிப்பேரரசு வைரமுத்து,

"எத்தனை பேர் ரசிக்கிறார்கள்? கணக்கு பார்ப்பதில்லை மலர்கள். மலரவே செய்கின்றன.

எத்தனை பேர் சுவாசிக்கிறார்கள்? கணக்கு பார்ப்பதில்லை காற்று. வீசிக்கொண்டே இருக்கிறது.

எத்தனை பேர் கேட்கிறார்கள்? கணக்கு பார்ப்பதில்லை பேராசிரியர். தமிழைப் பேசிக்கொண்டே இருக்கிறார்! " என்றார்.

**வழக்கறிஞர்**
**வெ.அன்புவாணன்**
*கொள்கை பரப்பு துணைச் செயலாளர்*



1986 ல் "தேவநாகரி வடிவில் உள்ள இந்தி தான் இந்தியாவின் ஆட்சி மொழி" எனும் அரசியலமைப்பு சட்டத்தின் வாசத்தை எழுதிக் கொளுத்தியதற்காக, பேராசிரியர் உட்பட 10 சட்டமன்ற உறுப்பினர்களின் பதவியைப் பறிக்கும் தீர்மானத்தை அவை முன்னவராகத் திகழ்ந்த நாவலர் நெடுஞ்செழியன் முன்மொழிந்ததைக் கண்டித்து, நமதரும் தலைவர் கலைஞர் அவர்கள்,

"அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் என்னோடு தமிழ் வளர்த்த அன்பழகனுக்கு இப்பேரவையில் இடமில்லை என்றால், எனக்கும் இங்கு இடம் தேவையில்லை என்று துண்டை உதறி நாவலர் தோளில் போட்டு, வெளியே வந்திருந்தால், அவரது காலில் விழுந்து வரவேற்றிருப்பேன்" என்றார் என்றால், அவ்வளவு பற்று, பாசம் தனது உயிர் நண்பர் பேராசிரியர் மீது தலைவர் கலைஞருக்கு!

திராவிட இயக்கங்களின் ஆரம்பகால ஆற்றல் மறவராக, தி.மு.க.வின் தளகர்த்தராக, சட்டமன்ற, நாடாளு மன்ற உறுப்பினராக, பொருளாளராக, தலைவர் கலைஞர் அவர்களின் அமைச்சரவையில் பல்வேறு துறைகளின் அமைச்சராக கழகப் பொதுச்செயலாளராக பொறுப்பேற்று, அற்ற குளத்தின் அறுநீர் பறவைபோல் அல்லாமல், தலைவர் கலைஞரின் வெற்றி, தோல்வி என பல சோதனையான காலங்களில், களங்களில் தோள்கொடுத்து, கொட்டியும், ஆம்பலும் ஒட்டி உறவாடி கொள்கை காத்த பேராசிரியர் தான் இன்றைய நமது தலைவர், திராவிட பேரரசர் தளபதியவர்களை பற்றி குறிப்பிடும்போது, ஸ்டாலின் கலைஞருக்கு மட்டுமல்ல! எனது கொள்கைகளுக்கும் அவர் தான் வாரிசு! " என்று எப்போதோ நமக்கு அடையாளம் காட்டினார்.

அந்தப் பேராசிரியர் பெருந்தகை அவர்களின் 102 வது பிறந்தநாளில் ஓங்குக! அவரது பெரும்புகழ் என்றே கழகத்தோழர்கள் தலைவரோடு இணைந்து, வாழ்த்தொலிப்போம்!

ஆம்! இது,

" அண்ணா அமைத்த கழகம்!
அவர் அறிவால் உயர்ந்த கழகம்!
கண்ணான கலைஞர் கழகம்!
நமை கண்போல் காத்திடும் கழகம்!
பொன்னான சேவையை
இந்நாட்டிற்கீந்த பேராசிரியரின் கழகம்!